# தெற்கில் இருந்து வரும் குரலுக்கு காத்திருங்கள்: ஸ்டாலின் பேசுகிறார்

*சென்னை, ஆக.31–*

‘தெற்கில் இருந்து வரும் குரலுக்காக காத்திருங்கள்’ என ஸ்டாலின் பேச இருக்கிறார்.

சமூகநீதி, மதச்சார்பற்ற அரசியல், சமதர்மம், சமத்துவம், மாநில சுயாட்சி, கூட்டாட்சிக் கருத்தியல் ஆகியவை உள்ளதே இணையற்ற இந்தியா. ஒரே மதம், ஒரே மொழி, ஒரே உணவு, ஒரே பண்பாடு, ஒரே தேர்வு, ஒரே தேர்தல் உள்ளிட்டவையெல்லாம், பலவகைப்பட்ட மக்கள் வாழும் இந்தியாவை உருக்குலைக்கும் நச்சுக் கருத்துகள்.

குமரி முதல் இமயம் வரையிலான பரந்து விரிந்த இந்திய நாட்டைக் காப்பாற்றும் கடமை நம் அனைவர் கைகளிலும் இருக்கிறது என்ற நோக்கோடு, பாரதீய ஜனதா கட்சி ஆட்சியின் அலங்கோலங்களை அம்பலப்படுத்தியும், பன்முகத்தன்மை கொண்ட, வலுவான மாநிலங்கள் கொண்ட, மதச்சார்பற்ற இந்தியாவைக் காப்பாற்றுவது குறித்தும், தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், Podcast (குரல்பதிவுத் தொடர்) வடிவில், ‘ஸ்பீக்கிங் பார் இந்தியா’ என்ற தலைப்பில் பேச இருக்கிறார்.

இத்தொடர் ஆங்கிலத்திலும், இந்தியாவின் பல்வேறு மாநில மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டும் வெளியாகவுள்ளது.

# மனைவியின் நடத்தையில் சந்தேகம்: மகனை வெட்டி கொன்ற தந்தை

*திருப்பதி, ஆக.31–*

ஆந்திர மாநிலம் ஒய் எஸ் ஆர் மாவட்டம் அஸ்தலிங்கய்ய பள்ளியை சேர்ந்தவர் சிவசங்கர். இவரது மனைவி சுஜாதா. இந்த தம்பதிக்கு கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 மகன்கள். இளைய மகன் சோமேஸ்வர ரெட்டி (வயது 10). இவர் அங்குள்ள பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வந்தார்.

மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சிவசங்கர் அவரிடம் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்தார். நேற்று இரவும் கணவன் மனைவி இடையே தகராறு ஏற்பட்டது.

மனைவியின் நடத்தையில் சந்தேகத்தால் 2வது மகனை கொலை செய்ய முடிவு செய்தார். இந்நிலையில் நேற்று அதிகாலை சிறுவன் சோமேஸ்வர ரெட்டி வீட்டில் ஒரு அறையில் படுத்து தூங்கிக்கொண்டு இருந்தார். அப்போது சிவசங்கர் வீட்டில் இருந்த கத்தியை எடுத்து வந்து தூங்கிக் கொண்டு இருந்த மகனை சரமாரியாக வெட்டினார். இதனால் சோமேஸ்வர ரெட்டி வலி தாங்க முடியாமல் அலறி துடித்தார்.

மகனின் அலறல் சத்தம் கேட்ட தாய் சுஜாதா மற்றும் அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து பார்த்தனர். சோமேஸ்வர ரெட்டி ரத்த வெள்ளத்தில் துடித்துடித்து தாய் கண் முன்னே பரிதாபமாக இறந்தான். அதற்குள் சிவசங்கர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

# 24 நாடுகளில் நடத்திய கருத்து கணிப்பு: 80 சதவீத இந்தியர்கள் பிரதமர் மோடிக்கு ஆதரவு

*வாஷிங்டன், ஆக.31*

24 நாடுகளில் நடந்த கருத்து கணிப்பில் 80 சதவீத இந்தியர்கள், பிரதமர் மோடிக்கு ஆதரவான கருத்து கொண்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த ‘பியு ரிசர்ச் சென்டர்’ என்ற அமைப்பு ஒரு கருத்து கணிப்பு நடத்தியது. இந்தியா உள்பட 24 நாடுகளில் 30 ஆயிரத்து 861 பேரிடம் கருத்து கேட்கப்பட்டது. கடந்த பிப்ரவரி 20ந் தேதி முதல் மே 22ந் தேதி வரை கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. பிரதமர் மோடி பற்றிய உளகளாவிய பார்வை, இந்தியா உலக வல்லரசு ஆவதற்கான வாய்ப்பு, இதர நாடுகளை பற்றிய இந்தியர்களின் கருத்துகள் ஆகியவை கருத்து கணிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதன் முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் கூறப்பட்டு இருப்பதாவது:

80 சதவீத இந்தியர்கள் பிரதமர் மோடிக்கு ஆதரவான கருத்து கொண்டுள்ளனர். அவர்களில் 55 சதவீத இந்தியர்கள் பிரதமர் மோடியை தீவிரமாக ஆதரிக்கும் கருத்து கொண்டுள்ளனர்.

20 சதவீத இந்தியர்கள் மட்டுமே மோடிக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

இந்தியாவை பற்றிய உலக மக்களின் கருத்து சாதகமாகவே உள்ளது. 46 சதவீதம் பேர் இந்தியாவுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தனர். 34 சதவீதம் பேர் எதிராக கருத்து தெரிவித்தனர். 16 சதவீதம் பேர் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டனர்.

**இஸ்ரேலில் 71 சதவீத மக்கள் ஆதரவு**

இஸ்ரேல் நாட்டில்தான் இந்தியாவுக்கு மிகவும் ஆதரவான நிலைப்பாடு காணப்பட்டது. அங்கு 71 சதவீத மக்கள் இந்தியாவுக்கு ஆதரவான கருத்து கொண்டுள்ளனர்.

இந்தியாவின் வலிமை அதிகரித்து வருவதாக இந்தியர்கள் கருதுகிறார்கள். 10 இந்தியர்களில் 7 பேர், தங்கள் நாடு சமீபகாலமாக மிகுந்த செல்வாக்கு பெற்றுள்ளதாக தெரிவித்தனர். கடந்த ஆண்டு கருத்து கணிப்பின்போது, 28 சதவீத இந்தியர்கள் மட்டுமே அப்படி தெரிவித்தனர்.

49 சதவீத இந்தியர்கள், சமீப ஆண்டுகளில் அமெரிக்காவின் செல்வாக்கு வலுவடைந்து வருவதாகவும், 41 சதவீத இந்தியர்கள் ரஷியாவின் செல்வாக்கு வலுவடைந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

சீனாவின் செல்வாக்கு பற்றிய இந்தியர்களின் பார்வை, ஆதரவாகவும், எதிராகவும் கலந்து காணப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

டெல்லியில் ஜி20 மாநாடு நடக்க உள்ள நிலையில், இந்த முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

# விளையாடும் குழந்தையைப் போல் ரோவரை படம் எடுத்த லேண்டர் தாய்

*பெங்களூரு, ஆக. 31–*

நிலவின் மேற்பரப்பில் துள்ளி விளையாடுவதுபோல், சுழலும் ரோவரை படம்பிடித்து, வீடியோவை அனுப்பிய லேண்டர் காணொளியை இஸ்ரோ வெளியிட்டது.



கடந்த ஆகஸ்ட் 23ம் தேதி சந்திரயான்3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் பல்வேறு கட்டங்களாக பூமி மற்றும் நிலவை சுற்றி வந்த நிலையில், வெற்றிகரமாக நிலவில் இறங்கி வரலாற்று சாதனை படைத்தது. லேண்டரானது நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கிய பின், லேண்டர் உட்பகுதியில் இருந்து வெளிவந்த ரோவர் வாகனம், நிலவில் தரையிறங்கி 14 நாட்களுக்கு (நிலவில் ஒரு நிலவு நாள்) பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், ரோவர் மேற்கொள்ளும் ஒவ்வொரு அப்டேட்களையும் இஸ்ரோ நிறுவனம் வெளியிட்டு வருகிறது. தற்போது, நிலவில் பாதுகாப்பாக உலா வரும் ரோவரின், புதிய வீடியோவை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

இது குறித்து இஸ்ரோ வெளியிட்ட பதிவில், பாதுகாப்பான பாதையை தேடி ரோவர் சுழற்றப்பட்டது. லேண்டர் இமேஜர் கேமரா மூலம் சுழற்சி படம்பிடிக்கப்பட்டது. இது நிலவில், ஒரு குழந்தை விளையாட்டுத்தனமாக, உல்லாசமாக இருப்பது போன்ற உணர்வை, தாய் பாசத்துடன் பார்ப்பது போன்ற உணர்வு என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கிடையில், ரோவரில் உள்ள ஆல்பா துகள் எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோஸ்கோப் கருவி, கந்தகம் இருப்பதை கண்டறிந்து உறுதிப்படுத்தியுள்ளது. இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட பதிவில், "ரோவரில் உள்ள ஆல்பா துகள் எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோஸ்கோப் (APXS) கருவி, ரோவர் இருக்கும் இடத்தில் சல்பர் (எஸ்) மற்றும் பிற சிறிய கூறுகளைக் கண்டறிந்து உறுதிப்படுத்தியுள்ளது.

# சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரருக்கு நிதி உதவி: அமைச்சர் உதயநிதி வழங்கினார்

*சென்னை, ஆக. 31–*

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரருக்கு “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” மூலம் நிதியுதவியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.



செப்டம்பர் 4–ந் தேதி முதல் 10–ந் தேதி வரை லெபனான் தலைநர் பெய்ரூட்டில் நடைபெற உள்ள 5ஆவது ஆசிய டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொள்வதற்காக சென்னையைச் சார்ந்த லோக பிரிதீப் செலவினத் தொகையாக ரூ.1,75,000 காசோலையையும், மலேசியாவில் நடைபெற்ற பன்னாட்டு அளவிலான சிலம்பப் போட்டியில் கலந்து கொண்டதற்காக சென்னையைச் சார்ந்த தீரஜ் செலவினத் தொகையாக ரூ.1,00,000 காசோலையையும் “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின்” சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் தமிழ்நாட்டில் திறமையான வீரர்களை உருவாக்கி, அவர்களை சர்வதேச அளவில் ஊக்குவிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"க்கு லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனத்தின் சார்பாக ரூ.1 கோடிக்கான காசோலையை அமைச்சர் உதயநிதியிடம் லார்சன் அண்ட் டூப்ரோ நிர்வாகிகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**E-AUCTION SALE NOTICE UNDER “THE I&B CODE, 2016”**
**M/s.OCEANIC EDIBLES INTERNATIONAL LIMITED (in Liquidation)**
**Reg. Off. : No. 29 Zackaria Colony, 4th Street, Choolaimedu Chennai – 600 094, Tamil Nadu.**
**Liquidator: Pathukasahasram Raghunathan Raman**
**Reg. No: IBBI/IPA-N00295/2017-2018/10896**
**Address: Ground Floor, # 93, Sivan Koil South Street, Vadapalani, Chennai-600 026, Tamil Nadu. E-mail: prramancirp@gmail.com Tel: 044-24721852**

The following Assets of **M/s. OCEANIC EDIBLES INTERNATIONAL LIMITED** (in Liquidation) forming part of the Liquidation Estate of the Corporate Debtor is for sale by the Liquidator.
The Sale of property hereunder will be done through the E-Auction platform:
**https://ncltauction.auctiontiger.net**

| Sl. No. | Asset Description LOT 1 | Date and Time of E-Auction | Reserve Price for the Lot | Earnest Money Deposit (EMD) & dead-line for submission |
|---|---|---|---|---|
| 1. | **Asset No. :1 :** Unit - II: **Prawn Hatchery Unit (SPF Litopenaeus) : Land measuring 15.79 Acres, along with Building (L&B) and Plant & Machineries (P&M)** in Survey Nos.809, 809/1, 809/2, 809/3, 810, 810/2B, 811, 811/1, 811/2, 811/3, 811/4A, 811/4B, 810/1, 810/2A, 810/2C and 810/3, Pudukuppam – Mandavai Village, Marakannam Post, Tindivanam Taluk, Villupuram District, Tamil Nadu. | **15/09/2023** Friday Between 12.00 Noon & 1.00 PM (with unlimited extension of 5 minutes each) | **Rs. 25,65,00,000/-** for the Whole Lot (Assets 1,2 & 3 all together in One Lot) Rupees Twenty five Crore and Sixty Five Lakhs | **Rs. 5,00,00,000/-** Rupees Five Crore On or Before **11/09/2023 (Monday)** |
| 2. | **Asset No. :2** Unit - III: **Prawn Hatchery Unit (SPF Litopenaeus): Land measuring 7.195 Acres (L&B), along with Building (L&B) and Plant & Machineries (P&M)** in Survey Nos.811 Pudukuppam - Mandavai Village, Marakannam Post, Tindivanam Taluk, Villupuram District, Tamil Nadu. | | | |
| 3 | **Asset No.3 : IQF Unit: Land measuring 13.21 Acres with Plant & Machineries, Industrial building used for Processing & Packing of Marine and Fruit varieties** along with Corporate office building contained in Old Survey No.580, New Survey No.809, 809/2 Marakannam Village Tindivanam Taluk, Villupuram District, Tamil Nadu | | | |

**Terms and Conditions of the E-auction Sale :**
1) The whole lot of assets will be sold strictly on “AS IS WHERE IS”, “AS IS WHAT IS”, “WHATEVER THERE IS”, “NO COMPLAINT” & “WITHOUT RECOURSE” BASIS. The sale is without any warrantees and indemnities.
2) The Bidders must note that Land & Building (L&B) along with Plant & Machinery (P&M) Contained in all the three assets (Asset 1, 2 & 3) are offered together in “One Single Lot” as LOT- 1.
3) The bidders are advised to conduct their own due diligence regarding the extents, title etc of Land & Building (L&B) & Physical condition of Plant & Machinery (P&M) offered for sale, before submitting their Bids.
4) The Liquidator does not give any assurance or warranty of the physical condition of the assets and their suitability for any sort of operation that the Bidder envisages.
5) The Complete E-Auction process document containing details of the Assets, terms of payment, online E-auction Bid Form, Declaration and Undertaking Forms, KYC documents & the General Terms and Conditions of online auction sale are available for downloading from **website: https://ncltauction.auctiontiger.net.**
6) The bidders are advised to go through the E-auction process document carefully and understand all the terms & conditions binding this E-auction Sale before submitting their Bids
7) The Bidders shall submit their BIDS in the prescribed form with all the necessary enclosures in sealed envelopes along with EMD for Rs. 5,00,00,000/- (Rupees Five Crores only) by way of DD/ pay order favoring “Oceanic Edibles International Limited, Liquidation Account” payable at Chennai, by SPEED POST only.
8) The BIDS without valid EMDs shall be rejected.
9) The Liquidator reserves his rights as provided under Regulation 33 of the I&B BOI (Liquidation Process) Regulations, 2016.
10) The Liquidator reserves his right to reject any or all of the Bids without assigning any reasons.
11) The Liquidator Can cancel or extend or modify etc. any terms and conditions of the E-auction.
12) The Liquidator reserves his right to cancel the E-auction any time and at any Stage without assigning any reasons whatsoever.
13) The Bidders whose bids are admitted would be provided login id and password for participating E-auction through E-mail at least one hour before the commencement of E-auction.
14) The EMD amount of the unsuccessful Bidders shall be refunded, apart from that of the second highest bidder which may be retained as a stand-by till such time the payment obligations are fulfilled by the Successful bidder.
15) The Liquidator reserves his right in announcing the successful bidder based on the highest bid received in the E-auction.
16) The last date for receipt of bid applications by Speed post is 11-09-2023, before 5-00 PM at the address of the liquidator given above.

**Pathukasahasram Raghunathan Raman**
**Company Liquidator**
**IBBI/IPA-N000295/2017-2018/10896**
**E- Mail : prramancirp@gmail.com**
**Date : 31.08.2023**
**Place : Chennai**
E & O. E



**INDUS FINANCE LIMITED**
**CIN :L65191TN1992PLC022317**
REG OFFICE: KOTHARI BUILDING, 4TH FLOOR, 114, M.G. ROAD, NUNGAMBAKKAM, CHENNAI – 600 034. Ph : +91 44 28331956
Fax : +91 44 28330208 E-mail : contact@indusfinance.com

**NOTICE OF 32nd ANNUAL GENERAL MEETING**

Notice is hereby given that 32nd Annual General Meeting (AGM) of the Company will be held through Video Conferencing ("VC") / Other Audio Visual Means ("OAVM") in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and the Rules made thereunder and the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 read with General Circular issued by the Ministry of Corporate Affairs (MCA) dated 28th December 2022 (10/2022) and Circular dated 5th January 2023 (SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4) issued by the Securities and Exchange Board of India, which allowed companies to hold AGM through VC / OAVM without the physical presence of the Members at a common venue.
Accordingly, the Annual General Meeting (AGM) of the Company will be held on Wednesday, September 27th at 4:00 p.m. ( through Video Conferencing ("VC") / Other Audio-Visual Means ("OAVM") provided by the Central Depository Services (India) Limited (CDSL) to transact the businesses as set out In the Notice of the 32nd AGM dated 10/08/2023, The electronic copy of the Annual Report for the year 2022 - 2023 along with the notice of AGM will be made available on the website of the Company at https://indusfinance.in/and on the websites of the stock exchanges where the securities of the Company are listed i.e. www.bselndia.com and also will be available on the website of CDSL at www.evotingindia.com Members can attend and participate in the AGM through VC/OAVM only the details of which will be provided by the Company in the Notice of AGM.
Accordingly, please note that no provision has been made to attend and participate in the AGM of the Company in person. Members attending the meeting through VC/OAVM shall be counted for the purpose of reckoning the quorum under Section 103 of the Companies Act, 2013.
The Notice of the AGM and the Annual Report will be sent electronically to those members whose e-mail addresses are registered with the Company/Registrar & Transfer Agents (RTA)/Depository Participants (DPs). However, as per circular No. SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 dated 13.5.2022 issued by SEBI the Company shall send hard copy of full Annual Report to only those shareholders who request for the same.
Members who have not yet registered their email addresses are requested to register their email addresses with respective depository participant(s) in case of dematerialized shares and members holding shares in physical mode are requested to update their email addresses with Company's RTA Cameo Corporate Services Limited, Subramanian Building, No.1, Club House Road, near Spencers Signal, Anna Salai, Royapettah, Chennai, Tamil Nadu-600002
Members who have not updated their bank account details for receiving the dividends directly in their bank accounts through Electronic Clearing Service or any other means may follow the below instructions: in case of Physical Holding, submit the above said Form ISR-1 and other relevant documents with Registrar and Transfer Agent of the Company at their address as mentioned above. Members holding shares in demat form are requested to update their bank account details with their respective Depository Participants
The Company is pleased to provide remote e-voting facility of CDSL to all its members to cast their votes on all resolutions set out in the Notice of the AGM. Additionally, the Company shall also provide the facility of voting through remote e-voting system during the Meeting. Detailed procedures for remote e-voting before/during the AGM will be available In the Notice of the AGM.
In case of any query, the members of the Company may contact theCompany / RTA (murall@cameolndia.com or Investor@cameolndia.com Ph.: 044-28460390).

By order of the Board
For **INDUS FINANCE LIMITED**
**K K DINAKAR**
Company Secretary and Compliance Officer
Date : 31-08-2023
Place : Chennai



**IN THE HON'BLE XI COURT OF SMALL CAUSES AT CHENNAI**
**M.P.No.1of 2023**
**in**
**Execution Petition No.711 of 2023**
**In**
**R.C.O.P.No.1936 of 2011**
P.A.G.Hassain Moulana,
No.49, Gunangudi Masthan Dargah Compound, Pichandi Lane, Royapuram, Chennai-600 013.
...Decree/ holder/ Petitioner
-Vs-
Gnanam
No.48/49, New No.25 Gunangudi Masthan Dargah Compound, Pichandi Lane, Royapuram, Chennai-600 013.
..Judgement/ Debtors/Respondent
Please take the notice that the Decree/ holder / Petitioner have filed the above said R.C.O.P.No .1936 of 2011 in above E.P.No. 711 of 2023 was came up before the In the Hon'ble XI Court of Small Causes at Chennai on 21.08.2023 and order notice through Paper Publication returnable by 14.09.2023.
Hence I request respondent to appear before the Hon'ble XII Assistant City Civil Court at Chennai on 14.09.2023 at 10.30 a.m. failing which further order will be passed and the matter will be decided in your absence.
P.Baskaran,
Counsel for Plaintiff.



**BEFORE THE HON'BLE XII SMALL CAUSES COURT AT CHENNAI**
**E.P.NO. 163 / 2023**
**in**
**R.L.T.O.P.No. 201 / 2022**
Lakshmi, W/o.Shaktivel
No.38, 4th Street,
New Vijayaragavapuram, 80Ft Road, Saligramam, Chennai–600093
...Decree Holder
Vs
S.Sekar Babu, S/o.Muthusrinivasan,
Proprietor Sivakarthikeyan Enterprises,
No.38, 4th Street, 1st Floor,
New Vijayaragavapuram, 80Ft Road, Saligramam, Chennai–600093
...Judgment Debtor
**NOTICE**
The Petitioner has filed E.P.NO. 163 / 2023 in R.L.T.O.P.No. 201 / 2022, The case was came up for hearing Before the Hon'ble XII Assistant City Civil Court at Chennai on 02.08.2023. SS Petition Filed and Allowed. Issue Paper Publication Against JD in Any one of Tamil Daily on or before 31.08.2023. For Appearance on 01.09.2023 at 10.30 a.m. either in person or through your counsel, failing which the matter will be decided in your absence.
**Adinarayana Rao**
Advocate,
Counsel for Decree Holder


மக்கள் குரல்
31-8-2023

# மீண்டும் மிரட்டும் புகுஷிமா

2011 மார்ச் 11–ல் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணங்களால் புகுஷிமா (Fukushima) அணு மின் உற்பத்தி ஆலை பாதிப்படையும் அபாயத்தை உணர்ந்து அணு ஆலை செயல்பாடுகள் உடனே நிறுத்தப்பட்டது.

அணு உலைகளில் கதிர்வீச்சு காரணங்களால் மாசுபட்ட கழிவுநீர் உருவாகும். அது கடல்நீரில் கலந்து விடக்கூடாது என்ற அச்சத்தில் அந்த அணுநிலைய பணிகள் நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்டாலும் உள்ளே ஆலைகளின் கொதிகலன்கள் இயங்கிக் கொண்டு தான் இருக்கிறது. அணுமின் தயாரிப்பு கிடையாது என்றாலும் சேமிப்பு கிடங்கில் இருக்கும் கதிர்வீச்சு சமாச்சாரங்கள் குளிர்நிலையில் இருப்பது அவசியமாகும். அங்கு 250 டன் அணு எரிபொருள் இருப்பதால் அங்கிருந்து 10 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள பொதுமக்கள் அப்புறப்படுத்தப்பட்டு விட்டனர். 10 ஆண்டுகளை கடந்து விட்டாலும் திரும்ப வரும் சாத்தியக்கூறு அறவே இல்லை.

ஆனால் சமீபமாக பல கட்டுமானங்கள் வர துவங்கும் சாத்தியக்கூறுகள் தென்பட ஆரம்பித்து விட்டது. கிட்டத்தட்ட 15 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டனர், அவர்களில் பலர் குடும்பமாக மீண்டும் திரும்ப ஆர்வமாகவே இருக்கிறார்கள்.

அதாவது அணு கதிர்வீச்சு பற்றிய பயம் ஏதும் எங்களுக்கு கிடையாது என்று யோசித்து வருகிறார்கள்.

தற்போது உலகிலேயே மிகப்பெரிய கதிர்வீச்சு அச்சப்பகுதி இந்த புகுஷிமா பகுதியாக இருக்கிறது. ஜப்பானோ மிகச் சிறிய தீவு நாடாக இருப்பதால் இப்படி ஒரு குடியிருப்பு பகுதி வீணாக உபயோகமற்று விட்டா வைத்திருக்க முடியும்!

மக்களின் மனநிலையை உணர்ந்து இந்த அணு ஆலை கழிவுநீரை வெளியேற்றி விட திட்டமிட்டு வருகிறது ஜப்பான்.

அந்த 10 கிலோ மீட்டர் சுற்றளவு மக்களுக்காக பசுபிக் மகா சமுத்திரத்தை கதிர்வீச்சு கழிவுகளால் அசுத்தப்படுத்தினால் அருகாமை நாடுகளான சீனா, கொரியா பாதிப்புகளை சந்திக்கும் அபாயத்தில் இருக்கிறது. ஜப்பான் உட்பட பல அருகாமை நாடுகள் கடல்வள உணவுகளை விரும்பி சாப்பிடுபவர்கள், அப்படி இருந்தும் மீன்வளத்தை பாதிக்கும் என்று அறிந்தும் கழிவுகளை கடல்நீரில் கரைக்க திட்டமிட என்ன காரணம்? அமெரிக்காவின் உத்தரவுகளால் ஜப்பான் மிரண்டு இப்படி ஒரு தவறான பாதையில் செல்லத் துணிகிறதா?

கொரோனா ஊரடங்கு 2020ல் அறிவிக்கப்பட்டு இருந்த நாட்களில் ஜப்பான் அரசு அப்படி ஒரு களங்கமான முடிவை நாம் எடுக்கவே கூடாது என்று ஜப்பானிய பொதுமக்கள் போராடத் துவங்கினர். அரசும் இப்படி ஒரு எதிர்ப்பை கண்ட பிறகு அந்த முடிவை தற்காலிகமாக நிறுத்திவிட்டனர்.

ஆனால் கடந்த வாரம் மீண்டும் இதே பிரச்சினை எழுந்துள்ளது. அப்பகுதி வாழ் பொதுமக்கள் 30 ஆயிரம் பேர் கையெழுத்திட்ட மனுவை இதுசார்பாக உரிய அமைச்சகங்களுக்கு அனுப்பி உள்ளனர். மெல்ல எதிர்ப்பு வலுக்க ஆரம்பித்து வருவதால் ஜப்பானிய அரசு இது சாதகமற்றது என்று புரிந்து கொண்டு தற்காலிகமாக மீண்டும் செயல்பட வைப்பதை நிறுத்தி இருக்கிறது.

ஆனால் மீண்டும் செயல்பட வைக்கப்போவது இல்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கவும் இல்லை!

பூமிவாசிகள் அண்ட சராசரத்தில் கிடைக்க இருக்கும் குடிநீருக்காக பல லட்ச கோடிகள் செலவு செய்து வருவதை நாமும் அறிவோம்.

நிலவுக்கும் கடந்த 2 ஆண்டுகள் சென்று விட்ட இந்த நிலையில் அசுத்தமான குடிநீர் சர்ச்சை எழுந்து இருப்பது மனதிற்கு பாரத்தை ஏற்படுத்துவதுடன் நகைத்திடவும் வைக்கிறது.

இதுவரை புகுஷிமா அணுமின் நிலைய கதிரியக்க கழிவுகளை நிலத்தில் குழி தோண்டி தான் புதைத்து வந்தனர். ஆனால் சமுத்திர நீரை அசுத்தப்படுத்தி குடியிருப்பை உருவாக்க வேண்டுமா? பொறுப்புள்ள நாடாக கருதப்படும் ஜப்பானே இதை யோசிக்கலாமா?

நமது கூடங்குளத்தில் உருவாகும் கழிவுகளை இத்திட்டத்தை அமுல்படுத்திய ரஷ்யாவே அகற்றிட வழிவகைகளையும் நிர்மாணித்து இருப்பதை மறந்து விடக்கூடாது.

ஒருமுறை விடுவிக்க துவங்கினால் அதை பின்வாங்க முடியாது! ஆனால் ஜப்பான் அரசாங்கமோ இதுவரை தங்களது முடிவை நிறுத்திட பின்வாங்குவது பற்றி எந்த அறிவிப்பையும் வெளியிடாமல் இருக்கிறது!




## ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி தொடக்கம்

# நேபாள அணியை 238 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய பாகிஸ்தான்

*கராச்சி, ஆக. 31–*

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் நேபாள அணியை பாகிஸ்தான் 238 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய 6 அணிகள் பங்கேற்கும் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் நேற்று தொடங்கியது. இந்தியாவில் வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெற உள்ள உலகக்கோப்பை தொடருக்கு ஆசிய அணிகள் சிறப்பாக தயாராகும் பொருட்டு இந்த முறை ஆசிய கோப்பை 50 ஓவர் வடிவில் நடத்தப்படுகிறது.இதில் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் அணிகள் ஒரு பிரிவிலும், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், இலங்கை அணிகள் மற்றொரு பிரிவிலும் இடம் பெற்றுள்ளன. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் – நேபாளம் அணிகள் மோதின. டாஸ் வென்ற பாகிஸ்தான் அணியின் கேப்டன் பாபர் அசாம் பேட்டிங்கை தேர்வு செய்தார். அதன்படி பாகிஸ்தான் அணி முதலில் பேட்டிங் செய்தது.

தொடக்க வீரர்களாக பகார் ஜமான், இமாம்உல்ஹக் களமிறங்கினர். தொடக்கத்தில் பகார் ஜமான் 14 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதனை தொடர்ந்து இமாம்உல்ஹக் 4 ரன்களில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் கேப்டன் பாபர் அசாம் , முகமது ரிஸ்வான் இணைந்து சிறப்பாக ஆடினர். அணியின் ஸ்கோர் 111 ரன்னாக இருந்த போது முகமது ரிஸ்வான் 44 ரன்களில் (ரன் அவுட் ) ஆட்டமிழந்தார்.தொடர்ந்து வந்த சல்மான் ஆகா 5 ரன்களில் வெளியேறினார். பின்னர் வந்த இப்திகார் அகமது 43 பந்துகளில் அரைசதம் அடித்தார். தொடர்ந்து சிறப்பாக ஆடிய பாபர் அசாம் 109 பந்துகளில் சதம் அடித்தார். இதன் பின்னர் பாபர் அசாம் , இப்திகார் அகமது இருவரும் இணைந்து பந்துகளை சிக்சருக்கு பறக்க விட்டனர். இறுதியில் பாகிஸ்தான் 50 ஓவர்கள் முடிவில் 6விக்கெட் இழப்பிற்கு 342ரன்கள் எடுத்தது. அந்த அணியில் பாபர் அசாம் 151ரன்கள் (14 பவுண்டரி, 4 சிக்சர்), இப்திகார் அகமது 109ரன்கள் (11 பவுண்டரி, 4 சிக்சர்) எடுத்தனர். நேபாளம் சார்பில் சோம்பால் கமி 2 விக்கெட், கரண் கேசி, சந்தீப் லாமிச்சானே தலா 1விக்கெட் வீழ்த்தினர்.

**104 ரன்களில் ஆல் அவுட்**

இதனை தொடர்ந்து 343 ரன்கள் இலக்குடன் நேபாளம் அணி விளையாடியது. பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல், அந்த அணி தொடக்கம் முதல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. குஷால் புர்டெல் 8 ரன்கள் , ரோஹித் பவுடல் ரன் எதுவும் எடுக்காமலும், ஆசிப் ஷேக் 5 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து சிறிது நேரம் நிலைத்து ஆடிய ஆரிப் ஷேக் 26 ரன்களும் , சோம்பால் கமி 28 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து வந்த வீரர்களும் அடுத்தடுத்து வெளியேறினர். இதனால் 23.4 ஓவர்களில் 104 ரன்கள் எடுத்து நேபாளம் அணி ஆட்டமிழந்தது.

இதனால் பாகிஸ்தான் அணி 238 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. பாகிஸ்தான் சார்பில் ஷதாப் கான் 4 விக்கெட் , ஷாஹீன் ஷா அப்ரிடி , ஹரிப் ரவுப் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இந்நிலையில் ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் பல்லகெலேயில் இன்று (வியாழக்கிழமை) நடக்கும் 2வது லீக்கில் நடப்பு சாம்பியன் தசுன் ஷனகா தலைமையிலான இலங்கை அணி, ஷகிப் அல்ஹசன் தலைமையிலான வங்காளதேசத்தை சந்திக்கிறது.